*KALAM – International Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*14(3), 2021*

# மேற்கத்திய கலாசாரம் முஸ்லிம் பெண்களின் நடத்தையை எவ்வாறு பாதிக்கிறது: இலங்கை, கண்டி மாவட்டத்தின் கல்ஹின்னைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஒரு சமூக ஆய்வு

**Fathima Rishadha M.A.[1], Ahamed Sarjoon Razick[2] & Iqbal Saujan[3]**
[1,2,3]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Oluvil

Correspondence: sarjoonra@seu.ac.lk[1]

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகமயமாக்கல் தனிமனித வாழ்க்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்குலக நாடுகள் தங்கள் கலாசார மேலாதிக்கத்தை கிழக்குலக நாடுகள் மீது திணிப்பதற்கு முனைகிறது அதில் சமூக ஊடகங்களின் பங்கு அளப்பெறியது. குறிப்பாக மேற்குலக கலாசார தாக்கம் முஸ்லிம் பெண்களுக்கு மத்தியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தாக்கங்கள் இஸ்லாமிய வழிகாட்டுதல்களுக்கு அப்பால் இஸ்லாம் தடுத்துள்ள பாவமான காரியங்களின்பால் இணைப்பதாக அமைந்துள்ளது. இவ்வாய்வு மேற்கத்தேய கலாசாரம் கல்ஹின்னை பிரதேச முஸ்லிம் பெண்களில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை கண்டறிவதை நோக்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அளவு மற்றும் பன்புசார் முறையிலமைந்த இவ்வாய்வில் மூடியவினாக்கொத்து மற்றும் முறைசாரா அவதானம் போன்ற தரவுத் திரட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுடன் ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள், இணைய ஆக்கங்கள் மற்றும் இதர வெளியீடுகள் போன்ற மூலங்களும் வாசிப்புக்குட்படுத்தப்பட்டன. இவ்வாய்வில் ஆய்வுப்பிரதேச முஸ்லிம் பெண்களில் 140 பங்குபற்றுனர்கள் எளிய எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு இவர்களிடம் அளவியல் வினாக்கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டன. அளவுசார் தரவுகள் SPSS மென்பொருளின் உதவியுடன் விபரனப் பகுப்பாய்வுக்குட்படுத்து. இவற்றுடன் அவதானம் மூலம் பெறப்பட்ட தரவுகள் குறியீட்டு முறை மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்படன. ஆய்வின் பிரதான கண்டறிதல்களாக பிரதேச பெண்களின் உணவு, உடை, விழுமியம் மற்றும் சமூகத்தொடர்பு போன்றன பகுதியளவில் மேற்கத்தேய கலாசாரத் தாக்கத்திற்கு உற்படுத்தப்பட்டுள்ளதுடன் இவற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட வயது பிரிவினர்களாக 15- 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் காணப்படுகின்றனர். மேலும் இந்நிலை கல்விகற்ற பெண்களிடமே அதிகம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நிலை தொடருமிடத்து சொந்த கலாசார நடைமுறைகளை மறந்து மேற்கத்தேய கலாசார ஒருங்கில் முஸ்லிம் பெண்கள் தங்கிவாழும் நிலை உருவாதுடன். இதன் மூலம் இஸ்லாமிய கலாசார விழுமியங்களை புறக்கனிக்கும் ஒரு சமூகத்தின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் என்பதை எதிர்வுகூறலாக குறிப்பிட முடியும்.*

***திறவுச் சொற்கள்:*** *கலாசார தாக்கம், மேற்கத்திய கலாசாரம், இஸ்லாமிய கலாசாரம், முஸ்லிம் பெண்கள், கல்ஹின்னை, இலங்கை*

## *1.* அறிமுகம்

இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டம் என்ற வகையில் அது மனிதனின் அனைத்து துறைகளுக்குமான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. இதற்கமைய சமூக மற்றும் கலாசார தொடர்பாடல், வியாபாரம், உடன்படிக்கை, செத்துப்பிரிப்பு, குடும்ப வாழ்வு என அனைத்துத் துறைகளும் இதில் உள்ளடங்குகின்றன. மனித இனத்தின் வளர்ச்சிப்பாதையில் கலாசாரம் என்னும்

சொல்லாடல் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளது. பொதுவாக கலாசாரம் என்பது மனித நடத்தையோடு இனைத்து நோக்கப்படுவதால் இதற்கு திட்டவட்டமான வரைவிலக்கணம் ஒன்றை வழங்க முடியாது. இருப்பினும் கலாசாரத்திற்கு வரைவிலக்கணம் வழங்குவதற்காக அறிஞர்கள் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். கி.பி. டய்லர் என்பவர் எழுதிய Primative Culture எனும் நூலில் ''அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், ஒழுக்கம், விருப்பம் மற்றும் சமூக உறுப்பினர் என்ற வகையில் மனிதனின் திறன்கள், ஆற்றல்கள் போன்றவற்றை இப்பதம் உணர்துவதாக குறிப்பிடுகின்றார் (நாளிர், 2017). இதற்கமைய கலாசாரம் என்பது சமுகத்தின் ஒரு பரந்த பொருளை கொண்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும். மேலும், கலாசாரம் என்பது, ஒரு சமூகத்தின் வாழ்க்கைமுறையை குறித்து நிற்கின்றது. இதனுள் ஆடை, திருமணமுறை, பழக்கவழக்கங்கள், மொழி, குடும்ப வாழ்வு, தொழில், மத வழிபாடுகள் மற்றும் விழாக்கள் போன்ற அனைத்தும் உள்ளடங்குகின்றன (Giddens, 2005), கலாசாரம் என்பது இயற்கையானதும், மனிதனால் உருவாக்கப்பட்டதுமாகும். இது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறையினருக்கு கடத்தப்படக்கூடியது. மேலும் ஒரு சமூகத்திலிருந்து மற்றொரு சமூகத்தை வேறுபடுத்திக் காட்டுவதாகும் (Pannilage, 2016). வரலாற்றாசிரியரான இப்னு கல்தூன் கலாசாரம் என்பதை இவ்வாறு வரைவிளக்கணப்படுத்துகின்றார், ''செம்மை நிலையை அடைந்த ஒரு சமூகத்தின் ஒழுக்கவியல், ஆன்மீகவியல், அழகியல் மற்றும் அறிவியல் என்பவற்றின் உச்சநிலையை இப்பதம் உணர்த்துவதாக குறிப்பிடுகின்றார்.'' கலாநிதி அமிர் ஹஸன் சித்தீகி ''கலாசாரம் என்பது நல்ல பழக்கவழக்கங்கள் நன்னயத்தல், சீரான சிந்தனை முதலியவற்றினூடாகப் புலப்படக்கூடிய உளப்பாங்குகளாகும்'' எனக்குறிப்பிடுகின்றார் (அமீன், 1996).

கலாசாரத்துடன் இனைத்து நோக்கப்படும் ஒரு சொல்லாடலே நாகரிகமாகும். இருப்பினும் நாகரிகம் என்பது கலாசாரத்தில் இருந்து வேறுபட்டதாக உள்ளது. நாகரிகம் என்பது பண்பாடு, தொழில், தொழில்நுட்பம், அரசு போன்றவற்றின் உச்ச வளர்ச்சியை குறித்து நிற்கின்றது. இதனாலயே 'நாகரிகம்' என்ற இலத்தீன் மொழிச் சொல்லுக்கு 'ஒரு ஊரில் வசிக்கும் ஒருவர்' என பொருள் வழங்கப்படுகின்றது. 'நாகரிகம்' என்ற சொல்லை நகரவாழ்வுடன் மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது மாறாக இது சிறந்த வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவது பற்றியும், இயற்கையின் வளங்களை மிகச் சிறப்பாகப் பயன்படுத்துவதையும், அதனால் மக்கள் குழுவின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் குறித்து நிற்கின்றது. மேலும், உணவு, கல்வி, உடை, தகவல் தொடர்பு, போக்குவரத்து மற்றும் பலவற்றைப் பற்றி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கூட்டாகவும் தொடர்ச்சியாகவும் செயல்படும் பல்வேறு சமூகத்தை முறைப்படுத்துவதை இது வலியுறுத்துகிறது. சுருக்கமாக கலாசாரம் என்பது தனிமனிதனின் உள்ளத்தில் தோன்றும் சிந்தனைகளின் வெளிப்பாடாகும். நாகரீகம் என்பது ஒரு குறித்த சமூகத்தின் சமுதாய முன்னேற்றத்தின் வெளிப்பாடாகும். இவ்வாறு உலக வரலாற்றில் பல நாகரீகங்கள் தோன்றி மறைந்துள்ளன. அவற்றில் சில பிரதேசம் சார்ந்தவையாகவும், சில இனம் சார்ந்தவையாகவும் மற்றும் சில மொழி சார்ந்தவையாகவும் வளர்ச்சியடைந்தனை. குறித்த இனத்தின், மொழியின், பிரதேசத்தின் மறைவுடன் அக்கலாசாரமும் மறைந்தது. இதற்கு உதாரணமாக ஆரம்பகால நதிக்கரை நாகரீகங்களான யூப்பிரடீஸ், டைக்கிறீஸ் (மொசபடேமியா), இந்து நதி (ஹாரப்பா, மொகஞ்சதாரோ), நைல்நதி நகரிகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இஸ்லாமிய கலாசாரம் என்பது இஸ்லாத்தின் வாழ்வியல் போதனைகளின் வெளிப்பாடாகும். இது அல்குர்ஆன், ஸுன்னாவை அடிப்படையாகக் கொண்டு மதீனா நாகரில் தோற்றுவிக்கப்பட்டது. வஹியை அடிப்படையாகக் கொண்ட சமய, பொருளாதார, அரசியல், கல்வி, கலாசார முறைகள் போன்றன அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கு மாற்றமாக பாரம்பரிய கலாசாரமானது மனிதனால் உருவாக்கப்பட்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட கலாசாரத்தில் சமயம் என்பது ஒரு கலாசார கூறு மாத்திரமேயாகும். ஆனால் இஸ்லாமிய கலாசாரம் இறைவனின் வஹியை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளமையால் ஒரு மனிதனின் வாழ்வில் அனைத்துத் துறைகளிலும்

இஸ்லாம் சமயத்தின் வழிகாட்டுதல்கள் பரந்துள்ளன. இது பற்றி பேராசிரியர் குலாம் ஆஸிம் குறிப்பிடும் போது "வழிதவறிய முஸ்லிம்கள் பின்பற்றும் நாகரிகம் இஸ்லாமிய நாகரிககத்தின் ஒரு பகுதியன்று இஸ்லாமிய நாகரிகம் குர்ஆனுக்கும், ஸுன்னாவுக்கும் முரண்பட்டதாக இருக்க முடியாது. தன்மானமுள்ள சமூகத்தின் வெளிப்படையான அடையாளம் அந்நாகரீக செல்வாக்கின் தாக்கத்திலிருந்து தனது சொந்த நாகரிகத்தை காத்துக் கொள்ளும் திறனில் தங்கியுள்ளது. இது அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாப்பதைவிட முக்கியமானதாகும்" (முக்தார், *1986*). இஸ்லாமிய நாகரீகத்தின் அடிப்படை தௌஹீத் ஆகும். தௌஹீத் என்பது அல்லாஹ்வை இறைவனாக ஏற்று அவனது ஏவல்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகும். இஸ்லாமிய கலாசாரத்திற்கும் மேற்கத்தேய கலாசாரத்திற்கும் இடையிலான பிரதான வேறுபாடு தௌஹீதாகும். இறைவன் மீது ஒரு முஸ்லிம் கொண்டுள்ள நம்பிக்கை அவனது வாழ்வின் ஆன்மீகம், வாழ்க்கை முறை, சட்டம் மற்றும் அரசாட்சி போன்ற அனைத்துத் துறைகளிலும் இது பிரதிபளிக்கின்றது. இதற்கு மாற்றமாக உலக முஸ்லிம்கள் ஒரே கலாசார பண்பை பகிர்ந்து கொள்வதில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். ஆனால் உலகில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் முஸ்லிம்களாக இருப்பதால் அவர்களிடையே ஒரே மாதரியான கலாசார அடையாளங்கள் மற்றும் நடைமுறைகள் பிரதிபளிக்கின்றது (Mughal, 2011). இதனையே உம்மா என்னும் சொல்லாடல் உணர்த்தி நிற்கின்றது. இது பற்றி பிலிப்ஸ் *(2012)* "இஸ்லாமிய கலாசாரம் என்பது இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகளுக்குட்பட்டு மக்களின் அன்றாட நடைமுறையில் இருந்து தோன்றும் மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் போன்றவற்றின் வெளிப்பாடாகும்" (TalatMakhmoor, 2017). இஸ்லாத்தின் போதனைகள் இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைத் தூண்கள் மற்றும் ஒரு முஸ்லிம் ஈமான்கொள்ள வேண்டிய ஆறு அடிப்படை அம்சங்களை பிரதிபலிக்கின்றது" எனக் குறிப்பிடுகின்றார்.

இஸ்லாமிய சாம்ராஜியம் விரிவுபடுத்தப்பட்ட போது இஸ்லாமிய நாகரிகம் பிற நாகரீகங்களை சந்திக்க வேண்டி நிலை ஏற்பட்டது. இதன் போது இஸ்லாமிய ஷரீஆத்திற்கு முரணில்லாத அம்சங்களை எடுத்துக் கொண்டதுடன், ஷரீஆவுக்கு முரணாண அம்சங்களை புரந்தள்ளியது. மேலும் இஸ்லாமிய நகரீகமானது ஒரு சர்வதேசத் தன்மை கொண்டது என்பதற்கு அதன் வணக்கவழிபாட்டு முறைகள் சான்று கூறுகின்றன. உலகின் எப்பகுதியில் வாழும் முஸ்லிங்களாக இருப்பினும் அவர்களின் வணக்க வழிபாடுகளில் ஓரோ தன்மை பிரதிபளிப்பதாக காணப்படுகின்றது. இஸ்லாமிய நாகரீகம் எதிலும் நடுநிலையை போதிக்கும் நாகரீகமாகும். இது இவ்வுலக மற்றும் மறுமை வாழ்வுக்குத் தேவையான அணைத்து வழிகாட்டுதல்களையும் கொண்டுள்ளதுடன் மறுமைக்காக இவ்வுலகையும், இவ்வுலகிற்காக மறுமையையும் தியாகம் செய்வதை ஏற்றுக் கொள்வதில்லை. அது ஈருலக வாழ்வையும் சமநிலைப்படுத்துகின்றது.

இன்றைய நவீன உலகில் கலாசாரங்களுக்கு இடையிலான மோதல் மற்றும் நகரீகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் போன்றன ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்தை முக்கிய துறையாக மாறிவருகின்றது. உலகமயமாக்கல் மற்றும் இலத்திரணியல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் ஏற்ப அபரிவிதமான வளர்ச்சி உலகின் பல கோணங்களிலும் உள்ள மக்களை ஒன்றினைத்ததுடன், சமூகங்களின் கலாசாரம் தொடர்பையும் இலகுபடுத்தியுள்ளது (Ellingsen, 2000). உலகமயமாக்களைத் தொடர்ந்து ஏற்பட்ட மேற்கத்திய கலாசார தாக்கமானது கிழைத்தேய நாடுகளில் தொடர்ந்தும் பேசும் பொருளாக மாறியுள்ளது. மேற்கத்திய ஏகபாத்திய மற்றும் குடியேற்றுக் காலணித்துவ நடவடிக்கைகள் கிழக்குலகுகளில் உள்ள நாகரீகங்களுடன் வழுவான தொடர்பை ஏற்படுத்தியது. இதன்விளைவாக மேற்கத்திய கலாசாரமானது ஏனைய உலக நாடுகளின் அரசியல், பொருளாதாரம் மட்டுமல்லாது தொழிநுட்பம், மொழி, சட்டம், வாழ்க்கை முறை மற்றும் உணவு, உடை என அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது (Pannilage, 2016). ஒரு கலாசாரத்தின் மீது பிற கலாசாரத்தின் தாக்குறவு தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவருகின்றது. இதற்கு இலங்கையும் விதிவிலக்கானதல்ல. இலங்கையில் உள்ள பல்லின கலாசார நடைமுறைகளப் பின்பற்றும் மக்களிடம் இதனை அவதானிக்க முடியும். ஆய்வுப்பிரதேசமான கல்ஹின்னை பிரதேசத்தின் முஸ்லிம் பெண்களிடம் காணப்படும் மேற்கத்திய கலாசார தாக்கங்களை கண்டறிந்து இவைகள் தொடர்பில்

இஸ்லாத்தின் நிலையை தெளிவுபடுத்த வேண்டிய தேவை ஆய்வாளர்களால் உணரப்பட்டமையே இவ்வாய்வின் பின்னணியாகும்.

## 2. ஆய்வுப் பிரச்சினை

கல்ஹின்னை பிரதேசமானது பல்கலாசார நடைமுறைகளைப் பின்பற்றும் மக்களைக் கொண்டு அமையப் பெற்றுள்ள ஒரு பிரதேசமாகும். இது முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டு ஒரு பிரதேசமாகும். இங்கு இஸ்லாமிய கலாசார விழுமியங்களுக்கு மாற்றமான வாழ்க்கை முறை, நவ-நாகரிகத்தை பிரதிபலிக்கும் ஆடை முறை, உணவு பழக்கவழக்கம், சமூக விழுமியங்கள் போன்றன காணப்படுவதுடன், இஸ்லாம் போதித்துள்ள எளிமையான வாழ்க்கை முறைக்கு மாற்றமான ஆடம்பரமான வாழ்க்கை முறையின் மீது அதிகம் நாட்டம் கொண்டவர்களாக ஆய்வுமாதிரிகள் காணப்படுகின்றமை ஆய்வாளர்களால் அவதானத்திற்குட்படுத்தப்பட்டது. இதனால் மேற்கத்தேய கலாசாரத்தை பிரதிபளிக்கும் ஆடை முறை, உணவு பழக்கங்கள், ஆண்- பெண் தொடர்புகள், தகாத நண்பர்களுடனான உறவு, இசை, திரைபடங்கள், மற்றும் தொடர் நாடகங்களின் மீது அதீத நாட்டம் போன்ற இஸ்லாம் மார்க்கம் தடுத்துள்ள நடைமுறைகளுக்கு வழிசமைத்துள்ளன. குறித்த இந்நடைமுறை தொடர்ந்தும் நீடிக்குமிடத்து பிரதேச பெண்கள் இஸ்லாமிய சமயத்தை விட்டும் தூரமாகி தங்களது மத நம்பிக்கையில் தப்பபிப்ராயம் கொள்வதற்கும், மேற்குலகின் கலாசாராம் மற்றும் கருத்தியலை ஆதரிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. பன்மைத்துவ சமூகத்தில் வாழும் ஒரு முஸ்லிம் தனது சொந்த கலாசாரத்தை பிரதிபரிக்காது பிரகலாசாரத்தில் கரைந்து செல்வது அவனது தனித்துவ அடையாளத்தை இழப்பதாகும். மேலும் ஒரு முஸ்லிம் பிற சமூகங்களுக்கு ஒரு முன்னுதரனமாக வாழ்ந்து இஸ்லாத்தின் போதனைகளை எத்திவைப்பது கடமையாகும். இதற்கு மாற்றமாக ஆய்வுப்பிரதேச பெண்கள் ஏனைய சமய நம்பிக்கையை பின்பற்றும் பெண்களில் மேற்குலகிக் கலசார நாகரீக நடைமுறைகளை பரப்பும் முகவர்களாகத் செயற்பட்டு வருகின்றனர். எனவேதான், ஆய்வுப்பிரதேச பெண்களிடம் காணப்படும் மேற்கத்தேய கலாசாரத்தின் தாக்கங்களை அடையானம் காண்பதையும் இஸ்லாமிய கலாசார நடைமுறைகளைடன் வேறுபடும் பாங்கினை விளக்குவதையும் முதன்மை நோக்கங்களாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் கண்டறிதல்கள் பிரதேச பெண்களின் நடைமுறையில் மேற்கத்தேய கலாச்சாரத்தின் தாக்குறவை விளக்குகின்றவகையிலும், இஸ்லாமிய காலாசாரம் மற்றும் மேற்கத்தேய கலாசாரம் போன்றவற்றை விளக்கி இஸ்லாத்தின் போதனைகளுக்குட்பட்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும் வாய்ப்பாக அமையும் என்பது ஆய்வாளர்களின் உயர்ந்த எதிரப்பார்ப்புக்களாகும்.





**Figure 1:** Research Area

கல்ஹின்னை பிரதேசமானது இலங்கையில் மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியில் அமைந்துள்ளது. இங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும் சிங்கள சமூகத்தினர் சிறுபான்மையாகவும் வாழ்ந்துவருகின்றனர். குறித்த பிதேசம் வடக்கே அங்கும்பரயையும், தெற்கே புஜாப்பிட்டியவையும், கிழக்கே அலவத்துகொடயையும் மேற்கே கெப்பிடிகலவையும் எல்லைகளாக கொண்டுள்ளது. இங்கு சுமார் 1500 குடும்பங்கள் வாசிக்கின்றனர். கல்ஹின்னை பிரதேச செயலகம் கல்ஹின்னை, கோவில முதுன, பல்லியகொடுவ மற்றும் படகொல்லாதெனிய ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இங்கு முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களாக பல்லியகொடுவ மற்றும் கோவில முதுன ஆகிய இரு கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. இவ்விரு பிரதேசங்களிலிருந்தே ஆய்வுக்கான ஆய்வு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 1.5 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் அமையப் பெற்றுள்ள பல்லியகொடுவ கிராம சேவகர் பிரிவு 166 குடும்பங்களையும், கோவில முதுன கிராம சேவகர் பிரிவு 158 குடும்பஙகளையும் கொண்டு அமையப்பெற்றுள்ளது. மொத்தமாக இவ்விரு பிரதேசங்களிலும் சுமார் 324 குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு வாழ்கின்ற முஸ்லிம் பெண்களின் சனத் தொகையை கருத்திற் கொண்டு விகிதாசார அடிப்படையில் ஆய்வு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

## 3. ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் உள்ள கல்ஹின்னை பிரதேசத்தின் பல்லியகொடுவ மற்றும் கோவில முதுன ஆகிய இரு கிராம சேவகர் பிரிவுகளிலும் 324 குடும்பங்கள் வாசித்து வருகின்றனர். இவ்விரு பிரதேசங்களினதும் மொத்த சனத்தொகையான 1782 ஆகும், அதில் 942ஆண்களும் 840 பெண்களும் உள்ளடங்குகின்றனர். 840 பெண்களில் ஆய்வுக்குட்படுத்த முடியுமான 17% (எண்ணிக்கை- 140) முஸ்லிம் பெண்கள் எளிய எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

அளவு மற்றும் பண்புசார் முறையில் அமைந்த இவ்வாய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ள. ஆய்வு மாரிதிகளிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொண்ட முதலாம் நிலைத்தரவுகள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 140 முஸ்லிம் பெண்களிடம் மூடிய வினாக்கொத்து மூலம் தரவுகள் திரட்டப்பட்டதுடன், ஆய்வாளர்கள் குறித்த பிரதேசத்தில் நீண்ட காலமாக வசித்துவருகின்றமையால் அவர்கள் முறைசாறா அவதானத்தின் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வின் கோட்பாட்டுத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்கான இரண்டாம் நிலைத் தரவுகளாக மேற்கத்திய கலாசரம் மற்றும் முஸ்லிம்கள் மீதான அதன் தாக்கம் தொடர்பில் எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணைய ஆக்கங்கள் போன்றன வாசிப்புக்குட்படுத்தப்பட்டது.

வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகள் SPSS (Version-26) மென்பொருளில் விபரனப் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. அவதானம் மூலம் பெறப்பட்ட தரவுகள் குறியீட்டு முறைமூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. பெறப்பட்ட தகவல்கள்யாவும் அட்டவனைகள், சொற்கள் மற்றும் வசனங்களிலும் விபரிக்கப்பட்டுள்ளன.

## 4. ஆய்வுக்கட்டமைப்பு

சமூகவியலாளர்கள் கலாசாரக் கூறுகளாக ஒரு சமூகத்தில் அமைந்துள்ள நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், விழுமியங்கள் போன்றவற்றை அடையாளப்படுத்தியுள்ளார்கள். மேலும் சில அறிஞர்கள் மொழி, ஆடை, உணவு, வாழ்க்கை முறை, எண்ணங்கள் போன்றவற்றை கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வாயில்களாக நோக்குகின்றனர்.

இவ்வாய்வில் கலாசார கூறுகள் அனைத்தும் ஆய்வுக்குட்படுத்துவது சாத்தியமற்றது என்பதாலும் ஆய்வின் பரப்பினை கருத்தில் கொண்டும் பின்வரும் கூறுகள் மாத்திரம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுக்கட்டமைப்பு**





**Table 1:** Conceptual Framwork

மேலுள்ள ஆய்வு அட்டவனைக்கு அமைய ஆய்வுமாதிரிகளின் ஆடை, உணவு, விழுமியங்கள் மற்றும் சமூக உறவுகள் போன்றவற்றை ஆய்வுக்குட்படுத்தி அவற்றில் மேற்கத்தேய கலாசாரத்தின் செல்வாக்கை அடையாளம்காண முயல்கின்றது. இதற்கமைய இந்நான்கு கூறுகளுடனும் தொடர்புடைய 29 வினாக்களை உள்ளடக்கியதாக வினாக்கொத்து வடிவமைக்கப்பட்டது. மேலும் இவ்வாய்வு இந்நான்கு கலாசாரக் கூறுகளுடனும் சுருங்கிக் கொள்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## 5. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

இவ்வாய்வின் கலந்துரையாடல் பகுதி இரண்டு பிரதான தலைப்புக்களின் கீழ் விபரிக்கப்படுகின்றது. அவற்றில் முதல் பகுதி ஆய்வுக்காக தரவுகள் பெறப்பட்ட ஆய்வுமாதிரிகளின் சுயவிபரங்கள் (Socio-Demographic) விளக்கபடுவதுடன் இரண்டாவது பகுதி வினாக்கொத்து மூலம் ஆய்வுக்குட்படுத்திய 29 வினாக்களை உள்ளடக்கிய நான்குபகுதிகளாக முன்வைக்கப்படட்டுள்ளது. அவற்றை நோக்குவோம்.

### *5.1 ஆய்வுமாதிரிகளின் விபரங்கள்*

ஆய்வு தொடர்பான தரவு வழங்குனர்களின் தனிப்பட்ட விபரம் பற்றிய வினாக்களில் கிராம சேவகர் பிரிவு, வயது, திருமண நிலை, கல்வித்தகைமை போன்ற அம்சங்கள் வினவப்பட்டது பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன.

| விபரங்கள் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| **கிராமசேவகர் பிரிவு** | | |
| பல்லியகொடுவ | 87 | 58% |
| கோவில முதுன | 53 | 35.3% |
| **மொத்தம்** | **140** | **93.3%** |
| **வயது** | | |
| 15-25 | 53 | 35.3% |
| 26-35 | 42 | 28% |
| 36-45 | 30 | 20% |
| 45 மேல் | 15 | 10% |
| **மொத்தம்** | **140** | **93.3%** |
| **திருமண நிலை** | | |
| திருமணமானவர் | 102 | 68% |
| திருமணமாகாதவர் | 38 | 25.3% |
| **மொத்தம்** | **140** | **93.3%** |
| **கல்வித் தகைமை** | | |
| கல்விகற்றவில்லை | 10 | 6.7% |
| ஆரம்ப நிலை கல்வி | 25 | 16.7% |
| இரண்டாம் நிலை கல்வி | 62 | 41.3% |
| பட்டதாரி | 17 | 11.3% |
| தொழில்தகைமை | 26 | 17.3% |
| **மொத்தம்** | **140** | **93.3%** |

***அட்டவணை* 2:** ஆய்வுமாதிரிகளின் விபரங்கள்

- ***கிராம சேவகர் பிரிவு***

*கல்ஹின்னை பிரதேசத்தின் பல்லியகொடுவ, கோவில முதுன ஆகிய இரு கிராமசேவகர் பிரிவுகளுமே ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள நான்கு பிரதேசங்களிலிருந்து இரண்டு பிரதேசங்கள் நோக்கமாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்விரு பிரதேசங்களிலும் அதிகமான முஸ்லிம்கள் வசித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு பிரதேசங்களிலும் தரவுகள் திரட்டுவதற்காக 155 வினாக்கொத்துகள் வழங்கப்பட்டு 152 வினாக்கொத்துகள் மீளப்பெறப்பட்டன. இவற்றில் ஆய்வுக்காக பயன்படுத்தக்கூடிய*

முழுமையான 140 வினாக்கொத்துகள் கிடைக்கப்பெற்றன. மேலே உள்ள அட்டவணைக்கு அமைவாக மொமத்தம் 140 வினாக்கொத்துகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் பல்லியகொடுவ கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 87 (62.1%) ஆய்வுமாதிரிகளிடமும் கோவில முதுன கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 53 (37.9%) ஆய்வுமாதிரிகளிடமும் தரவுகள் பெறப்பட்டன.

- **வயது**

ஆய்வுமாதிரிகளை வயது அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தி போது 15 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 53 (35.3%), 26 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 42 (28%), 36 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 30 (20%) மற்றும் 45 வயதுக்கும் மேற்பட்டவர்கள் 15 (10%) காணப்படுகின்றனர். மொத்த தரவுத்திரட்டலில் 15 தொடக்கம் 25 (35.3%) வயதுக்குட்பட்ட இளவயதினறும், 26 தொடக்கம் 35 (28%) வயதுக்கிடைப்பட்ட நடுத்தர வதுப்பெண்களுமே அதிகம் காணப்படுகின்றனர்.

- **திருமண நிலை**

ஆய்வுமாதிரிகளின் திருமண நிலையை ஆய்வுக்குட்படுத்தி கிடைக்கப் பெற்ற பெறுபேறுகள் மேலுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய மொத்த ஆய்வுமாதிரிகளில் அதிகமானவர்கள் திருமணமானவர்களாக 102 (68%) உள்ளனர்.

- **கல்வித் தகைமை**

ஆய்வுமாதிரிகளை கல்வித் தகைமையை அடிப்படையில் நோக்குகின்ற போது தரவு வழங்குனர்களில் அதிகமானோர் (41.3%) இரண்டாம் நிலைக் கல்வி கற்றவர்களாக உள்ளனர். முறைசார் கல்வியை பெறாதவர்கள் ஏனையோரிலும் பார்க்க குறைவாக (6.7%) காணப்படுகின்றனர். இதற்கு காரணம்: இப்பகுதியில் கல்விக்கான ஊக்குவிப்புக்கள் காணப்படுகின்றமையாகும்.

## *5.2* மேற்கத்தேய கலாசாரத் தாக்கம்

இப்பகுதியில் மேற்கத்திய கலாசாரத்தின் முஸ்லிம் பெண்கள் மீதான செல்வாக்கினை அடையாளம் காண்பதற்காக உணவு, உடை, சமூக உறவுகள் மற்றும் விழுமியங்கள் போன்ற கலாசாரக் கூறுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய வினாக்கொத்துகளை பகுப்பாய்வு செய்து பெறப்பட்ட முடிவுகள் பின்வரும் தனித்தனித் தலைப்புக்களின் ஊடாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

### *5.2.1* ஆடை

| மாறிகளின் (வினாக்கள்) | செல்லுபடியானவை | | | | | | | | | | | | சராசரி | இடை | ஆகாரம் | நியமவிலகல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வலிமையாக உடன்படுகிறேன் | | உடன்படுகிறேன் | | உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை | | மறுக்கிறேன் | | வலிமையாக மறுக்கிறேன் | | செல்லுபடி அற்றவை | | | | | |
| | F | % | f | % | f | % | F | % | F | % | f | % | | | | |
| பகுதி: I (ஆடை) | | | | | | | | | | | | | | | | |
| 1.கட்டாயம் மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை மறைத்தல் | 21 | 14% | 69 | 46 % | 50 | 33. 3% | 0 | 0% | 0 | 0% | 10 | 6.7% | 3.79 | 4.00 | 4 | 0.684 |
| 2. பூரண ஹிஜாப் | 42 | 28% | 60 | 40 % | 38 | 25. 3% | 0 | 0% | 0 | 0% | 10 | 6.7% | 4.03 | 4.00 | 4 | 0.758 |

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆடைமுறையை பின்பற்றல் | | | | | | | | | | | | | | | |
| 3.உடல் அமைப்புக்கு ஏற்றவாறு ஆடை அணிதல் | 27 | 18% | 64 | 42.7% | 22 | 14.7% | 23 | 15.3% | 4 | 2.7% | 10 | 6.7% | 3.62 | 4.00 | 4 | 1.063 |
| 4. அலங்காரமான ஆடைகளுக்காக அதிக பணங்களை செலவிடுதல் | 22 | 14.7% | 60 | 40% | 20 | 13.3% | 27 | 18% | 11 | 7.3% | 10 | 6.7% | 3.39 | 4.00 | 4 | 1.192 |
| 5.உலக பிரபலங்களின் ஆடைமுறையை பின்பற்றி ஆடை அணிதல் | 22 | 14.7% | 43 | 28.7% | 43 | 28.7% | 21 | 14% | 8 | 5.3% | 10 | 6.7% | 3.38 | 3.00 | 4 | 1.096 |
| 6.பிற மனிதர்களை கவர வேண்டும் என்னும் நோக்கில் ஆடை அணிதல் | 22 | 14.7% | 43 | 28.7% | 42 | 28% | 20 | 13.3% | 13 | 8.7% | 10 | 6.7 | 3.29 | 3.00 | 4 | 1.172 |
| 7.ஆண்களின் ஆடைமுறையை ஒத்த ஆடைகளை அணிவதில் நாட்டம் கொண்டவர்கள் | 0 | 0% | 43 | 28.7% | 36 | 24% | 42 | 28% | 19 | 12.7% | 10 | 6.7% | 2.74 | 3.00 | 4 | 1.043 |

கலாசாரத்தை பிரதிபலிக்கும் கூறுகளில் ஆடை பிரதான இடத்தைப் பெறுகின்றது. இஸ்லாம் ஆடை தொடர்பில் பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியுள்ளதுடன், அவ்வழிகாட்டல்களை முறையாக நடைமுறைப்படுத்துமாறு கட்டளையையும் வழங்கியுள்ளது. அவை பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

*"ஆதத்தின் மக்களே! உங்களுடைய வெட்கத்தலங்களை மறைப்பதற்காகவும், உங்கள் உடலுக்குப் பாதுகாப்பாகவும், அலங்காரமாகவும் இருக்கக் கூடிய ஆடைகளை நாம் உங்களுக்கு அருளியிருக்கின்றோம்." (அல்குர்ஆன் 7:26). மேலும் "நபியே! உமது மனைவியருக்கும் உமது புதல்வியருக்கும் மு∴மினானவர்களின் பெண்களுக்கும் அவர்கள் தங்களுடைய முன்தானைகளைத் தாழ்த்திக்கொள்ளுமாறு நீர் கூறுவீராக! இது அவர்கள் (கண்ணியமானவர்களென) அறியப்படுவதற்கு மிகவும் நெருக்கமானதாகும். அப்பொழுது அவர்கள் நோவினை செய்யப்பட மாட்டார்கள். அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவனாகவும் மிகக் கிருபையுடையவனாகவும் இருக்கிறான்." (அல்குர்ஆன்: 33:59).*

ஆய்வுமாதிரிகள் ஆடை அணியும் போது ''அவ்ரத்'' என்னும் கட்டாயம் மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை முழுமையாக மறைக்கின்ற வகையில் ஆடைகளை பின்பற்றுபவர்களாக அதிகமானவர்கள் (60%) காணப்படுகின்றனர். இதனை மேலே உள்ள அட்டவனையில் முதலாவது வினாவில் உடப்பட்டவர்கள் மற்றும் வலிமையாக உடன்பட்டவர்களின் வீதங்களில் நோக்க முடியும். இது ஆய்வுமாதிரிகளால் ஆடைதொடர்பில் கடைப்பிடிக்கப்படும் ஒழுக்க விழுமியங்களை மறைமுகமாக உணர்த்துகின்றது. இதற்கு அடுத்த நிலையில் 33.3% பங்குபற்றுனர்கள் அவ்ரத்தை முழுமையாக மறைப்பது தொடர்பில் நடுநிலையை குறிப்பிட்டுள்ளனர். இதற்குக் காரணம் ஆடைஅணியும் போது அவ்ரத் மறைக்கப்படுகின்றதா? இல்லையா? என்பதை பற்றி கவணத்திற் கொள்ளாமையாகும். ஆய்வுப்பிரதேச பெண்களில் சிலர் அணியும் ஆடை கைகள் மணிக்கட்டு வரை மறைக்கப்படாமையும், தலைமுடி வெளியில் தென்படக்கூடிய நிலையிலும் காணப்படுகின்றது (அவதானம்). இந்நடைமுறை மேற்கத்தேய பெண்களின் ஆடை நடைமுறையுடன் இயைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. மொத்தமாக ஆடை தொடர்பில் ஆய்வுமாதிரிகளின் நிலை (சராசரி:

3.79, இடை: 4, நியமவிலகல்.; 0.684) ஆரோக்கியமான நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஹிஜாப் என்பது பொதுவாக ''திரை'' என்ற பொருள் வழங்கப்பட்டாலும் நடைமுறையில் இது ஒரு பெண்ணின் கைகள் மற்றும் முகம், அல்லது கண்கள் தவிர, பெண் உடலை முழுவதுமாக மறைக்கும் பொதுவான ஒரு ஆடையைக் குறிப்பிதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை முஸ்லிம்களில் பெறும்பான்மையானவர்கள் இவ்வாடையை பின்பற்றி வருகின்றனர். இவ்வாடை முறை மத்திய கிழக்கு நாடுகளின் ஆடைக்கலாச்சாரத்தை ஒத்தாகும். இது அறபு நாடுகளின் கலாசார தாக்குரவின் செலாவாக்ககும். ஆய்வுமாதிரிகளிடம் ஹிஜாப் ஆடைமுறை தொடர்பில் வினவியபோது. பெரும்பான்மையானவர்கள் (68%) குறித்த ஆடைமுறையை பின்பற்றுவதாகவும் மிகக் குறைந்த (25.3%) வீதத்தினர் நடுநிலையை குறிப்பிட்டுள்ளனர். மேலும் இவ்வாடை முறையை மறுப்பவர்களாக எவரும் காணப்படாமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாடைமுறை மேற்கத்தேய ஆடைமுறையிலிருந்து வேறுபட்டுள்ளது. என்பதுடன் இது இலங்கை முஸ்லிம்களின் கலாசார அடையாளங்களில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. ஹிஜாப் ஆடை தொடர்பில் நடுநிலையைக் குறிப்பிட்ட பெண்களில் அதிகமானோர் *(15 – 25)* வயதுக்கு இடைப்பட்டவர்களாக உள்ளனர். குறித்த ஆடை இலங்கைச் சூழலில் பெரும்பான்மை சமூகத்தால் பல விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மொத்தமாக இது தொடர்பில் ஆய்வுமாதிரிகளின் நிலையை நோக்குகின்ற போது (சராசரி: 4.03, இடை: 4, நியமவிலகல்; 0.758) இஸ்லாமிய வரையறைகளைப் பேணும் ஆடைகளில் ஆய்வுமாதிரிகள் விருப்பம் கொண்டுள்ளமை தெளிவாகிறது.

இஸ்லாம் ஆடை தொடர்பில் வழிகாட்டும் போது ஆடைகள் தளவர்வானதாகவும், உடல் அமைப்பை வெளிப்படுத்தாததாகவும் அமைத்துக் கொள்ளுமாறு வழிகாட்டுகின்றது. இதற்கு மாற்றமாக உடல் அங்கங்களை வெளிப்படுத்தும் ஆடைகளை அணிவதை ஹராமாக்கியுள்ளது. காரணம் இது விபச்சாரத்திற்கு இட்டுச் செல்லும் என்பதனாலாகும். இதுபற்றி இஸ்லாம் பின்வருவாறு குறிப்பிடுகின்றது.

ஆடைத் தெரிவின் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்களுள் ஒன்றாக தளர்வான ஆடைத் தெரிவினை குறிப்பிட முடியும். 'அவ்ரத்' என்னும் கட்டாயம் மறைக்கப்பட வேண்டிய உடலுறுப்புக்களை வெளிக்காட்டக்கூடிய முறையில் அதன் அமைப்பு, நிறம் போன்றன தெரியுமாறு இறுக்கமான மெல்லிய ஆடைகளை அணிவதை தவிர்ந்து கொள்ளுமாறும் இஸ்லாம் வழிகாட்டியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் ''அல்லாஹ் வெட்கமுடையவன். அவன் வெட்கமுடையவர்களையே விரும்புகிறான்'' (அபூதாவுத், ஸஹீஹுல் புகாரி). ''ஒரு முறை அஸ்மா (ரழி) அவர்கள் மெல்லிய ஆடை ஒன்றை அணிந்து கொண்டு நபி (ஸல்)அவர்களின் சபைக்கு வருகை தந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் உடனே தமது முகத்தைத் திருப்பிக் கொண்டு கூறினார்கள்: அஸ்மாவே! பெண் பருவ வயதை அடைந்து விட்டால் அவன் தன் முகம் மற்றும் கைகளைத் தவிர்த்து மற்றய பகுதிகளை வெளிக்காட்டலாகாது'' என்று கூறினார்கள்.

இதுபற்றி ஆய்வுமாதிரிகளின் நிலையை ஆய்வுக்குட்படுத்திய போது பொரும்பான்மையானவர்கள் (60%) உடல் அமைப்பை வெளிகாட்டுமாறு ஆடை அணிவதை மறுத்துள்ளதுடன் 18% பங்குபற்றுனர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவாறு ஏற்றுக் கொண்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் *26* தொடக்கம் *35* வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மீதம் 15.3% இது தொடர்பில் நடுநிலையையே கடைப்பிடித்துள்ளனர். ஆய்வாளர்களின் அவதானத்திற்கு அமைய பெரும்பாலும் தொழில் மேற்கொள்ளும் பெண்களே இவ்வாறு உடல் அமைப்பை வழிகாட்டும் வகையில் ஆடை அணிபவர்களாக உள்ளதுடன். கல்வியைத் தொடரும் பெண்களிடம் இந்நிலை குறைவாகவே காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. எனவேதான் பெண்களின் வருமானத்திற்கும் அவர்களின் ஆடை அமைப்புக்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றமை அறிய முடிகின்றது. இது மேற்கத்திய ஆடைமுறைகளில்

காணப்படும் இறுக்கம், குட்டை, மற்றும் உடல் அமைப்பை வெளிக்காட்டுவதை நாகரிகமாக கருதுதல் போன்ற மேற்கத்தேய நடைமுறையை ஒத்த நிவைகளும் இப்பெண்களின் ஆடை முறையில் அவதானிக்க முடிகின்றது. மொத்தமாக ஆய்வுமாதிரிகளின் நிலையை எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 3.62, இடை: 4, நியமவிலகல்; 1.063) இஸ்லாமிய வழிகாட்டுதல் பின்பற்றப்படுகின்றமை தெளிவாகின்றது.

ஆய்வுமாதிரிகளிடத்தில் ஆடைக்கான செலவுகள் தொடர்பில் ஆய்வுக்குட்படுத்திய போது அதிக பணத்தை செலவு செய்து ஆடைகளைக் கொள்வனவு செய்வதில் பெரும்பான்மையான (54.7%) பெண்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மேலும் 25.3% பங்குபற்றுனர்கள் இவ்வாறு அதிக செலவு செய்து ஆடைகளைக் கொள்வனவு செய்வதை மறுத்துள்ளனர். ஆடைகள் அணியப்படுவதுடன் பிரதான நோக்கம் உடல் அங்கங்கள் வெளிப்படுத்தப்படாது மறைக்கப்படுவதற்காகும். ஆனால் இன்று ஒருவரின் ஆடையே அவரின் பொருளாதார நிலையையும், சமூக அந்தஸ்த்தையும் வெளிப்படுத்தும் குறிகாட்டிகளாக மாற்றமடைந்துள்ளது. இஸ்லாம் அழகிய, தூய்மையான ஆடைகளை வரவேற்றுள்ளதுடன். ஆடைகளுக்காக வீனான சலவுகளை மேற்கொள்வதை அது வெறுத்துள்ளது. இது பற்றி நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை இவ்வாறு குறிப்பிட்டார்கள், "வசதிகள் இருந்த போதிலும் தம்முடைய பணிவையும், அடக்கத்தையும் எடுத்துரைக்கும் வண்ணம் ஒருவர் சாதாரண ஆடையை உடுத்திக் கொண்டால், வல்ல இறைவன் அவருக்கு கண்ணியம், மேன்மை ஆகிய ஆடைகள் கொண்டு அழகுபடுத்துவான்." (அபூதாவூத், ஸஹீஹுல் புகாரி). மேற்கத்திய பெண்களிடம் காணப்படும் ஆடைமுறை சிறந்த வாழ்க்கைத் தரத்தின் வெளிப்பாடாகவும், நவநாகரிக ஆடை மற்றும் முன்னனியில் உள்ள ஆடை நிறுவனத்தின் ஆடை கொள்வனவு செய்வது சமூகத்தில் அந்தஸ்தை அதிகரிக்கும் அம்சமாகவும் காணப்படுகின்றது. மொத்தமாக எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 3.39, இடை: 4, நியமவிலகல்: 1.192) ஆய்வுமாதிரிகளிடத்தில் மேற்குலகின் மனப்பாங்கு ஆடை நடைமுறையில் பின்பற்றப்படுகின்றமை இங்கு கோடிட்டுக்காட்டக் கூடிய விடயமாகும்.

ஆடைகளை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்வதற்கும் தூண்டும் பிரதானமான விடயம் உலக பரபலங்களின் ஆடை நடைமுறையை அச்சொட்டாகப் பின்பற்றுகின்றமையாகும். இது தொடர்பில் ஆய்வுமாதிரிகளின் நிலையை ஆய்வுக்குட்படுத்திய போது பெரும்பான்மையானவர்கள் (43.4%) குறித்த நடைமுறையை ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வாறு ஏற்றுக் கொண்டவர்களில் அதிகமானவர்கள் *26* வயதுக்கும் *35* வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் குறைவனவர்களே (19.3%) இதனை மறுத்துள்ளனர். ஒரு முஸ்லிம் தனது அனைத்துச் செயற்பாடுகளிலும் இறைத் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியே வடிவமைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு மாற்றமாக பிறநபர்களை பின்பற்றுபவர்கள் அவர்கள் அவர்களைச் சார்ந்தவர்கள் என நபி (ஸல்) அவர்களில் அறிவிப்பின் மூலம் எச்சரிக்கை செய்கின்றது. இவ்வாறு பிறபலங்களை அச்சொட்டகாகப் மேற்கத்திய பிரபலங்களை பின்பற்றுதல் என்பது ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள இளைய தலைமுறையினர்களுக்கு மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வது அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் மொத்தமாக எடுத்து நோக்குகின்றபோது (சராசரி: 3.38, இடை: 3, நியமவிலகல்: 1.096) இது தொடர்பில் ஆய்வுமாதிரிகள் நடுநிலையைக் கடைப்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தான் அணியும் ஆடை மூலம் பிறரின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு ஆடை அணிவது தொடர்பில் ஆய்வுக்குட்படுத்திய போது 43.4% பங்குபற்றுனர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். பொதுவாக இது இஸ்லாமிய ஷரீஅத்திற்கு முரணானதாகும். மேலும் இவ்வாறு பெண்கள் பிர நபர்களை ஈர்க்கின்ற வகையில் ஆடை அணிவதையும், நறுமனம் பாவிப்பதையும் இஸ்லாம் தடுத்துள்ளது. இவ்வாறு பதிலலித்தவர்களில் அதிகமானவர்கள் *26- 32* வயதுக்கும் இடைபட்டவர்கள் என்பதுடன் இந்நிலை அதிகம் காணப்படுவது திருமணமானவர்களிடையே ஆகும். மேலும் இவர்கள் சமூக வலைதளங்களில் பிறரது விருப்பத்தை பெற வேண்டும், தான் பிறரை விட

சிறந்த ஆடைத்தெரிவுடையவர் என்பதை நிறுபிப்பதற்காகவே தனது புகைப்படங்களை பதிவிடும் பழக்கம் உடையவர்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது (அவதானம்). இதற்கு மர்றமாக பிரறைக் கவராத ஆடைகளை அணிவதை நோக்கமாகக் கொண்டவர்கள் சிறு குழவினரோ (22%) காணப்படுகின்றனர். இவர்களில் அதிகமானவர்கள் *36* வயதுக்கும் மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மொத்தமாக இது தொடர்பில் ஆய்வுமாதிரிகளின் நிலையை நோக்குகின்ற போது (சராசரி: 3.29, இடை: 3, நியமவிலகல்: 1.172) ஆய்வுமாதிரிகள் நடுநிலையை கைக் கொண்டுள்ளனர்.

ஆண்களின் ஆடையை ஒத்த ஆடை நடைமுறையைப் பின்பற்றுபவர்கள் பற்றி ஆய்வுக்குட்படுத்திய போது பெரும்பான்மையானவர்கள் (40.7%) இதனை மறுத்துள்ளதுடன் 28.7% பங்குபற்றுனர்கள் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். இஸ்லாம் ஆண் பெண்ணைப் போன்றும் பெண் ஆணைப்போன்றும் ஆடை அணிவதை தடுத்துள்ளுத. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள் "பெண்களைப்போன்று ஆடை அணியும் ஆண்களையும், ஆண்களைப் போன்று ஆடை அணியும் பெண்களையும் இறைவன் சபிக்கின்றான்." (ஸஹீஹுல் புகாரி). இதற்கு மாற்றமாக மேற்குலகில் இவ்வாறு ஆடையில் ஆண் பெண் பாகுபாடுகாட்டாது அணிவது பெண்களின் ஆடைச் சுதந்திரமாக்க கருதி பின்பற்றிவருகின்றனர். எனவேதான் ஆய்வுமாதிரிகளில் சிலர் இவ்விடயத்தில் நாட்டம் கொண்டுள்ளமை இவர்களின் மத நம்பிக்கையை புரக்கனிப்பதாகவும், மேற்குலகின் கருத்துக்களுக்கும், ஆடைநடைமுறைக்கும் ஆதரவு தெளிப்பதாகவும் உள்ளது. இவ்வாறு ஆர்வம் கொண்டவர்களில் அதிகமானவர்கள் *15* வயதுக்கும் *25* வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வாடை முறையில் நாட்டம் அற்றவர்களின் வயது *35*வயதுக்கும் மேற்பட்டவர்கள் என்பதும் கண்டறியப்பட்டுது. மொத்தமாக இது தொடர்பில் ஆய்வுமாதிரிகளின் நிலையை நோக்குகின்ற போது (சராசரி: 2.74, இடை: 3, நியமவிலகல்: 1.043) பெண்கள் ஆண்களைப் போன்று ஆடை அணிவதை மறுப்பவர்களாக உள்ளனர் என்பது தெளிவாகின்றது.

### *5.2.2* உணவு

கலாசாரத்தை பிரதிபலிக்கும் அம்சங்களில் உணவும் முக்கிய இடத்தை பெறுகின்றது. இஸ்லாத்தை பொறுத்தவரை சில உணவுகள் மனிதன் உண்பதற்கு ஆகுமாக்கியுள்ளதுடன் மற்றும் சிலவை தடை செய்துள்ளன. இவ்வாறு தடை செய்ததன் நோக்கம் மனிதனின் உயிர் மற்றும் புத்தி பாதுகாக்கப்படுவதற்காகும். மேலும் உணவுகள் உற்கொல்லும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கவிதிகளை நபி (ஸல்) அவர்கள் நடைமுறைப்படுத்திக்காட்டியுள்ளார்கள்.

| மாறிகளின் (வினாக்கள்) | செல்லுபளயானவை | | | | | | | | | | | | சராசரி | இடை | ஆகாரம் | நியமவிலகல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வலிமையாக உடன்படுகிறேன் | | உடன்படுகிறேன் | | உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை | | மறுக்கிறேன் | | வலிமையாக மறுக்கிறேன் | | செல்லுபடி அற்றவை | | | | | |
| | F | % | f | % | f | % | F | % | F | % | f | % | | | | |
| **பகுதி: II (உணவு)** | | | | | | | | | | | | | | | | |
| 8. கொள்வனவு செய்யப்படும் பொருட்களின் உள்ளீடுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் | 7 | 4.7 % | 13 | 8.7 % | 22 | 14. 7% | 98 | 65.3 % | 0 | 0% | 10 | 6.7% | 2.49 | 2.00 | 2 | 0.861 |

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9. உணவுப் பொருட்களின் கொள்வனவின் போது தரச்சான்றுதல்களை கவனத்திற் கொள்ளுதல் | 6 | 4% | 10 | 6.7% | 69 | 46% | 37 | 24.7% | 17 | 11.3% | 10 | 6..7% | 2.86 | 3.00 | 3 | 2.731 |
| 10.விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு உணவுப் பொருட்களை கொள்வனவு செய்தல் | 49 | 32.7% | 28 | 18.7 | 17 | 11.3% | 32 | 21.3% | 14 | 9.3% | 10 | 6.7% | 3.47 | 4.00 | 5 | 1.422 |
| 11. உணவு உண்ணும் போது இரு கரங்களையும் பயன்படுத்துபவர்கள் | 0 | 0% | 27 | 18% | 38 | 25.3% | 57 | 38% | 18 | 12% | 10 | 6.7% | 2.53 | 2.00 | 2 | 0.948 |
| 12. உணவு உண்பதற்காக கரண்டிகளைப் பயன்படுத்துதல் | 0 | 0% | 36 | 24% | 46 | 30.7% | 28 | 18.7% | 30 | 20% | 10 | 6.7% | 2.63 | 3.00 | 3 | 1.088 |
| 13. உணவு உண்ட பின் விரல்களை உறிஞ்சி சுத்தம் செய்தல் | 29 | 19.3% | 45 | 30% | 26 | 17.3% | 24 | 16% | 16 | 10.7% | 10 | 6.7% | 3.34 | 4.00 | 4 | 1.295 |
| 14. உணவு உண்ணும் போது சிதறிய உணவுகளை சுத்தம் செய்தல் | 15 | 10% | 20 | 13.3% | 37 | 24.7% | 26 | 17.3% | 42 | 28% | 10 | 6.7% | 2.57 | 3.00 | 1 | 1.336 |
| 15. உவை பிறருடன் பகிர்ந்து உண்ணுதல் | 76 | 50.7% | 37 | 24.7% | 27 | 18% | 0 | 0% | 0 | 0% | 10 | 6.7% | 4.35 | 5.00 | 5 | 0.786 |
| 16. குடும்பமாக உணவுகளை பகிர்ந்து உண்ணல் | 71 | 47.3% | 47 | 31.3% | 22 | 14.7% | 0 | 0% | 0 | 0% | 10 | 6.7% | 4.35 | 5.00 | 5 | 0.739 |
| 17. தரையில் அமர்ந்து உணவு உற்கொள்ளல் | 41 | 27.3% | 43 | 28.7% | 18 | 12% | 38 | 25.3% | 0 | 0% | 10 | 6.7% | 3.35 | 4.00 | 4 | 1.568 |

மேலுள்ள அட்டவனைக்கு அமைவாக ஆய்வுமாதிரிகளில் பெரும்பாலானோர் (65.3%) தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அதன் உள்ளீடு தொடர்பாக கவனம் செலுத்தாதவர்களாக காணப்படுகிறார்கள். மிகக்குறைந்த வீதத்தினர் (13.4%) பொருட்களின் உள்ளீடு தொடர்பில் கவனம் செலுத்துபவர்களாக உள்ளனர். மொத்தமாக எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 2.49, இடை: 2.00, நியமவிலகல்: 0.861) ஆய்வுமாதிரிகள் இது தொடர்பில் கவணயின்மையுடன் செயற்படுகின்றமை தெளிவாகின்றது. இதற்கு காரணமாக வியாபார நிறுவனங்களின் விளம்பரப்படுத்த முறைகள் மற்றும் பொருட்களை பொதி செய்வதற்கு நிறுவனங்கள் பயன்படுத்தும் உத்திகளுமாகும். பொருட்களை மேலோட்டமாக பார்த்தோ அல்லது பொருளால்

கவரப்பட்டோ கொள்வனவு செய்பவர்களே அதிகமா உள்ளனர். இதற்கு உதாரணமாக பொதி செய்யப்பட்ட ஆடு, மாடு மற்றும் கோழி இறைச்சியைக் குறிப்பிட முடியும். இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையில் அறுக்கப்படாத பிராணிகளை ஒரு முஸ்லிம் உண்பது ஹராமாகும் (Fischler, 2011). இதற்குமாற்றமாக இன்று KFC, MCdonalds போன்ற உணவகங்களில் முஸ்லிம்கள் உணவுகளை நுகரும் போது அறுக்கப்படும் முறைகள் மற்றும் அங்கிகரிக்கப்பட்ட இஸ்லாமிய நிறுவனங்களின் *halal* சான்றிதழ்களைப் பெற்றுள்ளதா என்பதில் கவனம் செலுத்தாத நிலை காணப்படுகின்றது. மேலும் உணவகங்களில் உண்பது தன்னை சமூகத்தின் மத்தியில் உயர்திக் காட்டும் என்ற மனப்பதிவுடன் ஆய்வுமாதிரிகள் காணப்படுகின்றனர். மேலும் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அதன் தரச்சான்றுதல் தொடர்பில் கவனம் செலுத்துவபர்களா மிகக்குறைந்த எண்ணிக்கையினரே (10.7%) காணப்படுகின்றனர். பெரும்பான்மையானோர் (36%) இது தொடர்பில் அலச்சியப் போக்குடன் செயற்படுகின்றனர். மொத்தமாக எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 2.86, இடை: 3.00, நியமவிலகல்: 2.731) ஆய்வுமாதிரிகள் மேற்குலப் பொருட்கள் மீது கொண்டுள்ள அதீத ஈடுபாட்டை இது மறைமுகமாகக் குறித்து நிற்கின்றது.

ஆய்வுமாதிரிகளில் 51.4% விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதுடன் 30.6% தமது தேவைக்காக கொள்வனவு செய்பவர்களாக உள்ளனர். விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம்காட்டும் பெண்களில் அதிகமானவர்கள் *25 – 35* வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பொதுவாக இன்று முஸ்லிம்களின் உணவுக்கலாசாரத்தை தீர்மானிப்பதில் மேற்குலகம் வெற்றி கண்டுள்ளது. இதனை கிழக்குலகுகளில் கொண்டு சேர்க்கும் முகவர்களாக சமூக ஊடகங்கள் செயற்படுகின்றன. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு இவ்வாய்வுப்பிரதேசமாகும். இவ்வாறு விளம்பரங்களினால் ஈர்க்கப்பட்டு பொருட்களைக் கொள்வனவு செய்து (சராசரி: 3.47, இடை: 4.00, நியமவிலகல்: 1.422) நுகர்வது ஹராம், ஹலால் பேணுவதிலிருந்து முஸ்லிம்களை தூரமாக்குகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆய்வுமாதிரிகள் அனைவரும் (93.3%) உணவு உண்ணும் போது வலக்கரத்தைப் பயன்படுத்தும் பன்புடையவர்களாக காணப்படுகின்றனர். இதனையே இஸ்லாமும் வரவேற்கின்றது. இது பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள் "உங்களில் ஒருவர் வலக்கரத்தால் உண்ணட்டும். குடிப்பதாக இருந்தால் வலக்கரத்தால் குடிக்கட்டும். உணவருந்தினால் ஏனெனில் நிச்சயமாக ஷைத்தான் இடக்கரத்தால் உண்ணுகிறான். இடக்கரத்தால் குடிக்கிறான்." (முஸ்லிம், ஸுனன் திர்மிதி). உணவு உண்ணம் போது இரு கரங்களை பயன்படுத்தும் பழக்கத்தை உடையவர்களாக 18% காணப்படுகின்றனர். இது ஒப்பீட்டளவில் மிகக்குறைந்த எண்ணிக்கையாகும். உணவு உண்ணும் போது இரு கரங்களையும் பயன்படுத்துவது மேற்கத்திய உணவு மேசை ஒழுக்கமாகு காணப்படுவதுடன் இதுவே இன்று சபை நாகரிகமாகவும் நோக்கப்படுகின்றது. மொத்தமாக எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 2.53, இடை: 2.00, நியமவிலகல்: 0.948) ஆய்வுமாதிரிகள் இந்நடைமுறையை மறுப்பவர்களாக உள்ளனர்.

பங்குபற்றுனர்களில் 24% உணவு உண்பதற்காக கரண்டியை பயன்படுத்துவதுடன் 38.7% கைகளையே பயன்படுத்துகின்றனர். இவ்வாறு உணவு உண்ணும் போது கரண்டிகளைப் பயன்படுத்தி உண்பது மேற்குலக உணவு மேசையின் ஒழுங்குகளில் ஒன்றாகும். அதிகமாக ஆய்வுமாதிரிகள் கரண்டிகளைப் பயன்பத்தி உணவு உண்பவர்களில் பெரும்பாலானவர்கள் *25-36* வயதுக்கும் இடைப்பட்டவர்களாகும். மொத்தமாக ஆய்வுப் பிரதேசத்தின் நிலையை நோக்குகின்ற போது (சராசரி: 2.63, இடை: 3.00, நியமவிலகல்: 1.088) பெரும்பாளானவர்கள் கைகளைப் பயன்படுத்தும் பழக்கம் உடையவர்களாக உள்ளனர் என்ற முடிவிற்கேவர முடியும்.

பங்குபற்றுனர்களில் அதிகமானவர்கள் (49%) விரல்களை உறிஞ்சி சுத்தம் செய்யும் பழக்கமுடையவர்களாக காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் சிறுவயதில் பெற்றோர்களால் வழங்கப்படும் வழிகாட்டுதலாகும். வீடுகளில் இந்நடைமுறை தாரளமாக பின்பற்றப்படுவதுடன். ஏனைய உணவு நிகழ்வுகளில் கலந்துகொள்கின்ற சந்தர்பத்தில் இந்நடைமுறையை பின்பற்ற மறுக்கின்றனர். காரணம் பிற மக்கள் தன்மை இழிவாக நோக்கக்கூடும் என்பதகாலாகும் (அவதானம்). நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு விரல்களை உறிஞ்சி சுத்தம் செய்யும் பன்புடையவர்களாக காணப்பட்டதுடன் இன்றய நவீன விஞ்சானம் இதன் பின்னணியில் உள்ள மனிதனின் உணவுச் சமிபாட்டு நலன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் செற்ப எண்ணிக்கையான (26.7%) பங்குபற்றுனர்களே இந்நடைமுறையை பின்பற்றாது புறக்கனிப்பவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறு புறக்கணிப்பவர்கள் முறைசார்கல்வியை பெற்றுக் கொண்டவர்கள் என்பதும் 35 வயதுக்கு உற்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சுத்தம் செய்வது மேற்கத்தேய உணவு மேசை ஒழுக்கத்துக்கு மாற்றமான நடைமுறையாகும் சபை ஒழுங்கீனமாகவும் நோக்கப்படுகின்றது. குறித்த இவ்விடயத்தில் ஆய்வுமாதிரிகளின் நிலையை மொத்தமாக எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 3.34, இடை: 4.00, நியமவிலகல்: 1.295) நபி (ஸல்) அவர்களின் சுன்னாவை பின்பற்றும் பழக்கமுடையவர்களாக காணப்படுகின்றனர்.

சிந்திய உணவை சுத்தம் செய்து உண்பதை இஸ்லாம் வரவேற்றுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘சாப்பிடும் போது உங்களில் ஒருவரது உணவுக் கவளம் தவறி கீழே விழுந்தால் விட்டால் அவர் அதை எடுத்து அதில் ஒட்டி இருப்பதை அகற்றி சுத்தம் செய்துவிட்டு அதை உண்ணட்டும் அதனை ஷைத்தானுக்கு விட்டுவிட வேண்டாம்.’’ (புகாரி, முஸ்லிம்). ஆய்வுப்பிரதேசத்தில் 23.3% பங்குபற்றுனர்களிடையே சிந்திய உணவைச் சுத்தம் செய்யும் உண்ணும் பழக்கம் உடையவர்களாக காணப்படுகின்றனர். இது மொத்த பங்குபற்றுனர்களில் மிகக் குறைந்த வீதமாகும். இவ்வாறு உடன்படுபவர்களில் அதிகமானவர்கள் 35 வயதுக்கும் மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 45.3% பங்குபற்றுனர்களிடையே குறித்த செயல்பாட்டை மேற்கொள்ளும் பழக்கமற்றவர்களாக உள்ளனர். இது ஒப்பீட்டளவில் அதிகமானதாகும். இதற்குக் காரணம் குறித்த நடைமுறையை ஒரு அநாகரீகமான செயலாகக் கருதுகின்றமையாகும் (அவதானம்). இந்நிலை அதிகம் காணப்படுவது 15 வயதுக்கும் 25 இடைப்பட்டவர்களாகும். உணவு உண்ணும் போது சிதறிய உணவை சுத்தம் செய்து உண்பதை மேற்கத்திய உணவு ஒழுங்கு முறையில் தன்னை தானே தாழ்த்திக் கொள்ளும் ஒரு செயற்பாடாக கருதுகின்றனர். மொத்தமாக நோக்குமிடத்து (சராசரி: 2.57, இடை: 3.00, நியமவிலகல்: 1.336) அதிகமானவர்கள் இந்நடைமுறையை புறக்கணிப்பவர்களாக உள்ளணர்.

ஆய்வுமாதிரிகளில் அதிகமானவர்கள் (சராசரி: 4.35, இடை: 5.00, நியமவிலகல்: 0.786) உணவை பிறருடன் பகிர்ந்து உண்ணும் பழக்கமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதனையே இஸ்லாமும் விரும்புகின்றது. இதுபற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். ‘‘ஸலாமைப் பரப்புங்கள். (உணவைப்) பகிருங்கள். மனிதர்கள் தூங்கும் வேளை எழுந்து நின்று அல்லாஹ்வை வணங்குங்கள். அமைதி பெற்றவர்களாக சுவனம் நுழைவீர்கள்” (முஸ்லிம்). பிறருடன் உணவுகளை ஒற்றுமையாக பரிமாறும் போது அன்பும், மதிப்பும் ஏற்படும். இந்நடைமுறை மேற்கத்தேய உணவு நடைமுறைகளிலும் காணப்படுகின்றது. மேலும் ஆய்வுமாதிரிகள் அரைவாசிக்கும் அதிகமானோர் (சராசரி: 4.35, இடை: 5.00, நியமவிலகல்: 0.739) குடும்பத்துடன் சேர்ந்து உணவுகளைப் பரிமாறும் பழக்கமுடையவர்களாக காணப்படுகின்றனர்.

உணவு உண்ணும் போது தரையில் அமர்ந்து உண்ணும் பழக்கம் 56% பங்குபற்றுனர்களிடம் காணப்படுகின்றது. மேலும் சிலரிடம் (25.3%) உணவு மேசைகளில் அமர்ந்து உண்ணும் பழக்கத்தை உடையவர்களாக உள்ளனர். இந்நிலை உயர் வருமானத்தை உடைய குடும்பங்களிளேயே அதிகம் காணக்கூடியதாக உள்ளது (அவதானம்). காரணம் உணவு உண்ணும் போது மேசையில் அமர்ந்து

தனிப்பட்டவர்கள் தனது தேவையை கருத்திற் கொண்டு உண்பது மேற்கத்திய மேசை ஒழுக்கமாகும். மொத்தமாக ஆய்வுமாதிரிகளில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் (சராசரி: 3.35, இடை: 4.00, நியமவிலகல்: 1.568) தரையில் அமர்ந்து உண்பதில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

### *5.2.3 சமூக உறவுகள்*

| மாறிகளின் (வினாக்கள்) | செல்லுபடியானவை | | | | | | | | | | | | சராசரி | இடை | ஆகாரம் | நியமவிலகல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வலிமையாக உடன்படுகிறேன் | | உடன்படுகிறேன் | | உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை | | மறுக்கிறேன் | | வலிமையாக மறுக்கிறேன் | | செல்லுபடி அற்றவை | | | | | |
| | F | % | f | % | f | % | F | % | F | % | f | % | | | | |
| **பகுதி: III (சமூக உறவுகள்)** | | | | | | | | | | | | | | | | |
| 18. எதிர் பாலினத்தவர்களுடன் நற்பு பராட்டுதல் | 0 | 0% | 42 | 28 % | 59 | 39. 3% | 28 | 18.7 % | 11 | 7.3% | 10 | 6.7% | 2.94 | 3.00 | 3 | 0.904 |
| 19. சமூக வலையதளங்களில் புகைப்படங்களை பதிவிடுதல் | 21 | 14 % | 25 | 16. 7% | 34 | 22. 7% | 22 | 14.7 % | 38 | 25.3 % | 10 | 6.7% | 2.78 | 3.00 | 1 | 1.409 |
| 20.நண்பர்களை தெரிவு செய்யும் போது நடத்தையை மதிப்பீடு செய்தல் | 34 | 22. 7% | 20 | 13. 3% | 50 | 33. 3% | 36 | 24% | 0 | 0% | 10 | 6.7% | 3.11 | 3.00 | 3 | 1.465 |
| 21.நண்பர்களின் தீய நடத்தையை தடுத்தல் | 49 | 32. 7% | 17 | 11. 3% | 22 | 14. 7% | 29 | 19.3 % | 23 | 15.3 % | 10 | 6.7% | 3.29 | 3.00 | 5 | 1.523 |
| 22. காதலை ஏற்றுக் கொள்ளல் | 20 | 13. 3% | 32 | 21. 3% | 27 | 18 % | 28 | 18.7 % | 33 | 22% | 10 | 6.7% | 2.84 | 3.00 | 1 | 1.390 |
| 23. காதலர்களின் சந்திப்பை ஏற்றுக் கொள்ளல் | 0 | 0% | 42 | 28 % | 24 | 16 % | 36 | 24% | 38 | 25.3 % | 10 | 6.7% | 2.50 | 2.00 | 4 | 1.184 |
| 24. திருமணத்திற்கு முன்னரான சந்திப்புக்களை அங்கீகரித்தல் சுத்தம் | 24 | 16 % | 50 | 33. 3% | 29 | 19. 3% | 27 | 18% | 10 | 6.7 | 10 | 6.7% | 3.36 | 4.00 | 4 | 1.183 |

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செய்தல் | | | | | | | | | | | | | | | | | | | |

மனிதன் தனித்து வாழ முடியாது அவன் சமூகத்துடன் இணைந்தே வாழ வேண்டும். இஸ்லாம் மனிதர்களிடையே சிறந்த சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அவ்வடிப்டையில் ஒவ்வொரு உறவுகளுக்கு இடையிலும் உள்ள வரையறைகளை தெளிவாக விளக்கி உள்ளது.

ஆய்வுமாதிரிகளில் 28% எதிர்பாலினத்தவர்களுடன் நற்புரவாடுவதில் ஈடுபடுவதுடன் அவற்றை ஆதரிப்பவர்களாக காணப்படுகின்றனர். இவர்களை வயது அடிப்படையில் பகுப்பாய்வுக்குட்படுத்திய போது *15* தொடக்கம் *25* வயதுக்கு இடைப்பட்டவர்களாக காணப்படுகின்றமை அறிய முடிகிறது. இதற்கு மாற்றமாக 26% பங்குபற்றுனர்கள் எதிர்பாலினத்தவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதை மறுத்துள்ளதுடன் 39.3% இது தொடர்பில் நடுநிலையை குறிப்பிட்டுள்ளனர். இது ஒப்பீட்டளவில் அதிகமானதாகும். இந்நிலையில் உள்ளவர்களில் அதிகமானவர்கள் *35*வயதுக்கும் மேற்பட்டவர்களாக காணப்படுகின்றனர். பொதுவாக இஸ்லாம் எதிர்பாலினத்தவர்களுடன் நற்புறவாடுவதை தடுத்துள்ளது. காரணம் பாவமான செயல்களின் பால் இட்டுச் செல்லும் என்பதனாலாகும். இதற்குமாற்றமாக மேற்கத்தேய நாடுகளில் நற்புரவாடுதல், தொட்டுப்பேசுதல், கட்டியனைத்தல், கைகுழுக்குதல் போன்றன பிறரை மதிக்கும் நாகரீகமான முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆய்வுப்பிரதேசத்தின் இந்நிலைக்கான காரணம் வீடுகளில் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கட்டுப்பாடற்ற சுதந்திம் மற்றும் இளையதலைமுறையினர் மத்தியில் அதிகரித்துள்ள சமூக வலைதளங்களின் ஆதிக்கம் போன்றவற்றைக் குறிப்பிட முடியும் (Hanisah, 2013). மொத்தமாக நோக்குமிடத்து (சராசரி: 2.94, இடை: 3.00, நியமவிலகல்: 0.904) ஆய்வுமாதிரிகளில் ஆதரிப்பவர்களும் மறுப்பவர்களும் சநிலையில் காணப்படுகின்றமை அறியமுடியும்.

ஆய்வுமாதிரிகளில் 30.7% சமூக வலைதளங்களில் புகைப்படங்களை பதிவிடுவதை ஏற்றுக் கொள்பவர்களாகவும், 40% இதனை ஆதரிப்பவர்களாக உள்ளனர். இவ்வாறு ஆதரிப்பவர்களில் பெறும்பாலானவர்கள் *15 – 25* இடைப்பட்ட இளம் பெண்கள் என்பது கண்டறியப்பட்டது. இதற்கான காரணம் இன்று சமூகவலைதளங்களில் மேற்கத்திய இளைய தலைமுறையினரால் பின்பற்றப்படும் "Tranding life style" ஆய்வுமாதிரிகள் அப்படியே பின்பற்ற வேண்டும் என்ற மனோநிலையாகும். மொத்தமாக எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 2.78, இடை: 3.00, நியமவிலகல்: 1.409) குறித்த நடைமுறையை ஆதரிப்பவர்களாகவே உள்ளனர்.

நண்பர்களைத் தெரிவு செய்யும் போது அவர்களின் நடத்தையை கவணத்தில் கொண்டே 36% தெரிவு செய்கின்றனர். இதற்குமாற்றமாக 24% பதவி, கல்வித்தகைமை, குடும்ப அந்தஸ்து போன்றவற்றைக் கவணத்தில் கொண்டு தெரிவு செய்கின்றனர். பொதுவாக இஸ்லாத்தில் நற்புக்கும், நண்பர்களைத் தெரிவு செய்வதிலும் அதிகமான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. காரணம் நல்ல நன்பர்களின் நடத்தைகள் இறைவனுக்கு நெருக்கமாக்கும். மேலும் இறைவனை முற்படுத்தியே நற்புரவாடும் படியும் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது. இதற்கு மாற்றமாக மேற்கத்தேய நற்புரவாடல்கள் சமூக அந்தஸ்த்தையும் குடும்பப்பின்ன்ணியையும் கவனத்தில் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. இது தனிநபர்களின் நடத்தையைக் கவனத்தில் கொள்வதில்லை. இது தொடர்பில் ஆய்வுமாதிரிகளிடம் ஆரோக்கியமான நற்புத் தெரிவு முறை காணப்படுவது பராட்டத்தக்குத (சராசரி: 3.11, இடை: 3.00, நியமவிலகல்: 1.465). மேலும் தனது நண்பன் தீய நடத்தையில் பயனிக்கும் போது அவளை நல்வழிப்படுத்துவதில் அறைவாசிக்கும் மேற்பட்ட (Mean: 3.29, Mode: 3.00, Std.: 1.523) ஆய்வுமாதிரிகள் ஆர்வமாக உள்ளமையை அறியமுடிந்தது. இதற்குமாற்றமாக ஆய்வுமாதிரிகள் தனது நன்பிக்கு ஏற்ப தானது நிலையை மாற்றிக் கொள்ளும் இயல்பு அதிகமான பெண்களிடம்

காணப்படுகின்றமை அவதானிக்க முடிந்தது. இஸ்லாம் வரைமுறையற்ற நற்பை தடுத்துள்ள போதும் மேற்கத்திய தொலைகாட்சி நிகழ்ச்சசிகள், இசை கானொளிகள், சினிமாக்கள் என்பவற்றின் அடிமைப்படுதலின் பிரதிபலிப்பாக ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள இளைஞர்கள் மத்தியில் வரைமுறையற்ற இந்நற்புரவாடல் இடம்பெறுகின்றமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆய்வுமாதிரிகளில் 34.6% காதல் வயப்படுத்ல் மற்றும் எதிர்பாலினருடன் காதல் தொடர்பை ஏற்படுத்துவதை ஏற்றுக் கொண்டுள்ளனர். மேலும் 40.7% இதனை மறுத்துள்ளனர். காதல் தொடர்பை ஏற்றுக் கொண்டவர்களில் அதிகமானவர்கள் இளவயதுப் பெண்கள் *(25* வயதுக்கும் குறைவானவர்கள்) என்பதுடன் இவர்கள் பாடசாலை அல்லது பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்தவர்களாக உள்ளமை கண்டறியப்பட்டது. காதல் என்பது இயற்கையானதும் யதார்த்தமானதும் ஆகும் என்ற கருத்து நிலை இன்று மேற்கு மற்றும் கிழக்குலக சினிமாக்கள் மற்றும் இலக்கியங்களின் ஊடாக முன்வைக்கப்படுகின்றது (Karandashev.V, 2015). இதன் ஈர்ப்பினாலலே ஆய்வுப்பிரதேச பெண்களில் காதலை ஏற்றுக்கொள்ளும் நிலை காணப்படுகின்றது. இஸ்லாம் முற்றுமுழுதாக ஒரு ஆண் ஒரு பெண்மீது விருப்பம் கொள்வதையே, அன்புகொள்வதையே மறுக்கவில்லை ஆனால் இஸ்லாம் விதித்துள்ள வரையறைகளை அது மீறக்கூடாது. இதற்குக் காரணம் முறையற்ற ஆண் பெண் தொடர்பு விபச்சாரத்திற்கு இட்டுச் செல்லும் என்பனாதாலும். இதற்கு மாற்றமான இன்று மேற்குலகில் முறையற்ற ஆண் பெண் தொடர்பே காணப்படுகின்றது. இதுதான் காதல் என்னும் மாயயை முஸ்லிம் பெண்களிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக நோக்குமிடத்து (சராசரி: 2.50, இடை: 2.00, நியமவிலகல்: 1.184) காதல் தொடர்பை மறுப்பவர்களாக உள்ளனர்.

மேலும் 28% பங்குபற்றுனர்கள் காதலர்கள் தனியாக சந்நித்துக் கொள்வதனை ஏற்றுக்கொள்வதுடன் 49.3% இதனை மறுத்துள்ளனர். இதற்குக் காரணம் இஸ்லாம் ஆண், பெண் தனிமையில் இருப்பதை தடுத்துள்ளமையாகும். இதற்கு மாற்றமாக மேற்குலகில் ஆண்கள், பெண்கள் இவ்வாறான சந்திப்புக்கள் மேற்கொள்வது "dating" என்னும் சொல்லாடல் மூலம் அனுமதியை வழங்கியுள்ளது (Kasia.2019). மொத்த எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 2.50, இடை: 2.00, நியமவிலகல்: 1.184) ஆய்வு மாதிரிகளிடம் இதற்கு மாற்றமான நடைமுறை காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

திருமண பேச்சுவார்த்தைக்குப் பின் ஆண், பெண் சந்தித்துக் கொள்ளல், பெருட்களைக் கொள்வனவு செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதை 49.3% பங்குபற்றுனர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதுடன். 37.3% பங்குபற்றுனர்கள் இதனை மறுத்துள்ளனர். அதிகமானவர்கள் (சராசரி: 3.36, இடை: 4.00, நியமவிலகல்: 1.183) இந்நடைமுறையை ஏற்றுக் கொண்டுள்ளமை பகுதியளவில் மேற்கத்தேய கலாசாரத்தின் செல்வாக்கை உணர்த்துகின்றது. இதனை இஸ்லாம் தடுத்துள்ளது. ஆண், பெண் திருமனத்தின் பின் உருவாகும் உறவுகள் அல்லாத வழிமுறைகள் விபச்சாரத்திற்கு இட்டுச் செல்லத்தக்கது என்பதனாலாகும். இவ்வாறான சந்திப்புக்கள் மேற்கத்திய dating கலாசாரத்தின் தாக்கமாகும் (Kasia.2019).

### *5.2.4 விழுமியங்கள்*

| மாறிகளின் (வினாக்கள்) | செல்லுபஎயானவை | | | | | | | | | | | | சராசரி | இடை | ஆகாரம் | நியமவிலகல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வலிமையாக உடன்படுகிறேன் | | உடன்படுகிறேன் | | உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை | | மறுக்கிறேன் | | வலிமையாக மறுக்கிறேன் | | செல்லுபடி அற்றவை | | | | | |
| | F | % | f | % | f | % | F | % | F | % | f | % | | | | |
| **பகுதி: IV (விழுமியங்கள்)** | | | | | | | | | | | | | | | | |
| 25. முகமன் கூறுதல் | 60 | 40 % | 55 | 36. 7% | 25 | 16. 7% | 0 | 0% | 0 | 0% | 10 | 6.7% | 3.89 | 4.00 | 5 | 1.428 |
| 26. முகமன் கூறுவதற்காக ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தல் | 0 | 0% | 43 | 28. 7% | 31 | 20. 7% | 20 | 13.3 % | 46 | 30.7 % | 10 | 6.7% | 2.51 | 3.00 | 1 | 1.238 |
| 27. முகமனுடன் கைலாகு மேற்கொள்பவர்கள் | 13 | 8.7 % | 14 | 9.3 % | 18 | 12 % | 31 | 20.7 % | 64 | 42.7 % | 10 | 6.7% | 2.15 | 2.00 | 1 | 1.346 |
| 28. சமூக வலையதளங்களில் ஓய்வு நேரங்களை செலவிடுபவர்கள் | 51 | 34 % | 19 | 12. 7% | 23 | 15. 3% | 27 | 18% | 20 | 13.3 % | 10 | 6.7 | 3.39 | 3.50 | 5 | 1.491 |
| 29. பொழுது போக்குக்காக திரைப்படங்கள் பார்த்தல் மற்றும் இசை கேட்டல் | 36 | 24 % | 43 | 28. 7% | 22 | 14. 7% | 20 | 13.3 % | 19 | 12.7 % | 10 | 6.7% | 3.41 | 4.00 | 4 | 1.367 |

ஆய்வுமாதிரிகளில் 76.7% முகமன் கூறுவதை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் 16.7% நடுநிலையைக் குறிப்பிட்டுள்ளனர். இஸ்லாத்தில் ஒரு முஸ்லிம் இன்னுமொரு முஸ்லிமுக்கு ‘‘அஸ்ஸலாமு அலைக்கும் (உன்மீது சாந்தி உண்டாகட்டும்) எனக்கூறும் படி வழிகாட்டியுள்ளதுடன். இவ்வாறு ஒருவருக்கு சலாம் கூறப்பட்டால் அதற்கு பதில் கூறுவது மற்றய முஸ்லிமின் மீது கடமையாகும். இந்நடைமுறையே ஒரு முஸ்லிமின் அடிப்படை ஒழுக்கவியலை அளவிடும் கருவியாகவும் உள்ளது. ஆய்வு மாதிரிகளில் அதிகமானவர்களிடம் (சராசரி: 3.89, இடை: 4.00, நியமவிலகல்: 1.428) இந்நடைமுறை காணப்படுகின்றமை கண்டறியப்பட்டது.

முகமன் கூறுவதற்காக மேற்த்தேய நாடுகளில் பின்பற்றப்படும் Hi, Hello, Good morning போன்ற வார்த்தைகளை ஆய்வுமாதிரிகள் பயன்படுத்து தொடர்பில் ஆய்வுக்குட்படுத்தியபோது 44% பங்குபற்றுனர்கள் இதனை மறுத்துள்ளதுடன் 28.7% பங்குபற்றுனர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வாறு ஏற்றுக் கொண்டவர்களில் (சராசரி: 2.51, இடை: 3.00, நியமவிலகல்: 1.238) அதிகமானவர்கள் *15 -25* இடைப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான காரணம்

ஆங்கலம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், சிறுவயது முதல் ஆங்கில வழியில் கல்வி பயின்றமையுமாகும். குலாசார கூறுகளில் மொழி பிரதாக இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ் மொழியில் ஆங்கில வார்த்தைகளை கலந்து பேசுவதும் மேற்கத்தேய கலாசார செல்வாக்கை உணர்த்தி நிற்கின்றது.

முகமன் கூறும் போது கைலாகு (Shaking Hand) மேற்கொள்வது தொடர்பில் ஆய்வுக்குட்படுத்திய போது 63.4% பங்குபற்றுனர்கள் மறுத்துள்ளதுடன் 18% ஏற்றுக்கொண்டுள்ளனர். கைலாகு மேற்கொள்வது மேற்கத்தேய கலாசாரத்திலிருந்து தோற்றம் பெற்ற ஒரு நடைமுறையாகும். ஆய்வுப்பிரதேச பெண்களிடம் குறைவாகக் (சராசரி: 2.15, இடை: 2.00, நியமவிலகல்: 1.346) காணப்படுகின்ற போதிலும் ஆண்களிடம் இது அதிகமாக காணப்படுகின்றமை அவதானிக்கத்தக்கது. மேலும் ஆய்வுமாதிரிகள் எதிர் பாலினர்களுடன் கைலாகு மேற்கொள்ளும் நடைமுறையை முற்றாக மறுத்துள்ளனர்.

ஆய்வுமாதிரிகள் தங்களது ஓய்வு நேரங்களை சமூகவலையதளங்களில் செயவிடுவது தொடர்பில் ஆய்வுக்குட்படுத்திய போது 46.4% பங்குபற்றுனர்கள் ஏற்றுக்கொள்வதுடன் 31.3% பங்குபற்றுனர்கள் இதனை மறுத்துள்ளனர். இவ்வாறு ஏற்றுக் கொண்டவர்களை வயது அடிப்படையில் பகுப்பாய்வுக்குட்படுத்திய போது அவர்களில் பெரும்பாலானோர் (67%) (15 - 25) வயதிற்கு இடைப்பட்டவர்களாகவே உள்ளனர். இதனை மறுத்தவர்களில் பெரும்பாலானவர்கள் *35* வயதுக்கும் மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மொத்தமாக எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 3.39, இடை: 3.00, நியமவிலகல்: 1.491) அதிகமானவர்கள் இதனை ஏற்றுக் கொள்பவர்களாக உள்ளனர்.

பொழுதுபோக்குக்காக திரைப்படம் பார்த்தல் மற்றும் இசை கேட்டல் போன்ற செயற்பாடுகளில் அரைவாசிக்கும் (52.7%) மேற்பட்ட பங்குபற்றுனர்கள் ஈடுபடுகின்றனர். இதனை மறுப்பவர்கள் செற்பமானவர்களே (26%) உள்ளனர். ஷரீஆவுக்கு முரணான திரைப்படம், பாடல் இரண்டையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. மேலும் இதில் ஈடுபடுவது பவமாக காரிணமாகும். இதற்கு மாற்றமான மேற்குலகில் இது அனுமதிக்கப்பட்ட பொழுபோக்கு வழிமுறையில் ஒன்றாக பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இஸ்லாத்தைப் பொருத்தவரையில் பொழுது போக்கு என்பது இறைவனின் அருட்க்கொடையாகும் இது பற்றி மறுமையில் விசாரிக்கப்படும். மேற்கத்திய விஞ்சானிகளின் கருத்துப்படி ஓய்வு நேரத்தில் இசை கேட்பது உடல் மற்றும் உள அமைதியை ஏற்படுத்தும் எனக்குறிப்பிடுகின்றனர் (Veysi.ect.al, 2009). இதே தனோநிலையிலே அதிகமான ஆய்வுமாதிரிகள் இச்செயற்படுகளில் ஈடுபடுகின்றமை அவதானிக்க முடிந்தது. மொத்தமாக எடுத்து நோக்குகின்ற போது (சராசரி: 3.41, இடை: 4.00, நியமவிலகல்: 1.367) அதிகமாகனவர்கள் இதனை ஏற்றுக் கொள்பவர்களாக உள்ளனர்.

### *6. முடிவுரை*

இஸ்லாமிய கலாசாரம் அல்குர்ஆன் மற்றும் ஸுன்னா அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவற்றை ஒவ்வொரு முஸ்லிமும் கடைபித்து அதற்கமைய ஒழுக வேண்டும் என்பது இறைவனின் கட்டளையாகும். இதற்கு மாற்றமாக கல்ஹின்னை முஸ்லிம் பெண்களின் ஆடை, உணவு, சமூக ஒழுங்கு மற்றும் விழுமியங்களில் மேற்கத்திய கலாசாரத்தின் ஊடுருவல் இடம்பெற்றுள்ளமை ஆய்வாளர்களால் அவதானத்திற்குட்படுத்தப்பட்டது. இதற்கமைய கல்ஹின்னை பிரதேச முஸ்லிம்களின் கலாசாரத்தில் மேற்கத்திய கலாசாரம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைக் கண்டறிதல் என்னும் நோக்கில் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய கல்ஹின்னை முஸ்லிம்களின் வாழ்வில் கலாசார நடைமுறைகளான உணவு, உடை, விழுமியங்கள் மற்றும் சமூக உறவுகள் போன்ற அம்சங்கள் சிலவற்றை இஸ்லாம் காட்டித்தந்த வழிகாட்டல் பின்பற்றப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளதுடன் சிலவற்றில் மேற்கத்திய கலாசார நடைமுறையை பிரதிபளிப்பதாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டது.

ஆடை கலாச்சாரத்தை எடுத்து நோக்கின் கல்ஹின்னை பிரதேச முஸ்லிம் பெண்களின் மத்தியில் பெரும்பாலனோர் அவ்ரத் முறையைப் பின்பற்றிய, தளர்வான ஆடை முறையையும் பின்பற்றுதல் மற்றும் மாற்றுப்பாலினரது ஆடை முறையை பின்பற்றாமை போன்ற இஸ்லாமிய நடைமுறை காணக்கூடியதாக உள்ளது ஆயினும் ஒரு சிறு பகுதியினர் இதனை புறக்கணிப்பவர்களாகவும் உள்ளனர். மேலும் ஆடைக்காக அதிகம் செலவு செய்தல், ஆடம்பரம், நாகரிகத்திற்கமைவான (கயளாழைெ) ஆடை தெரிவு, பிரபல நபர்களை பின்பற்றுதல் போன்ற விடயங்களில் இஸ்லாமிய நடைமுறையில் இருந்து விலகிய மேற்கத்திய கலாசார நடைமுறையை பிரதிபளிப்பதை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான ஆடை விடயத்தில் மேற்கத்திய கலாசாரத்தின் தாக்கத்திற்கு உற்பட்டவர்களை வயது ரீதியாக நோக்கும் போது அதிகமாக கவரப்பட்டவர்களாக 15-25 வயதுக்கு இடைப்பட்டவர்களை காணக்கூடியதாக உள்ளது. இதற்கான முக்கிய காரணமாக அதிகரித்த சமூகவலைதளங்களின் பயன்பாடுகளாகும்.

உணவு விடயத்தில் உண்ணும் போது வலது கரத்தினால் உண்ணல், பகிர்ந்து உண்ணல், குடும்பத்துடன் இணைந்து உண்ணல், தரையில் அமர்ந்து உண்ணல் போன்ற விடயங்களில் இஸ்லாமிய நடைமுறை பெரும்பாலனோரால் பின்பற்றப்படுகின்றது. இருப்பினும் இதற்குமாற்றமாக உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அதன் உள்ளீடுகள், தரச்சான்றிதழ் பற்றிய கவனம் செலுத்துதல், சாப்பிட்ட பின் விரல்களை உறிஞ்சி சுத்தம் செய்தல் மற்றும் சிதறிய உணவுகளை சுத்தம் செய்து சாப்பிடுதல் போன்ற விடயங்களில் இஸ்லாத்திற்குப் நடைமுறைகள் புறக்கணிக்கப்பட்டு, அவற்றில் மேற்கத்திய கலாசாரத்தின் தாக்கத்தை அதிகமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சமூக உறவுகளான மஹ்ரம் பேணல், நற்பு, காதல், திருமணம் ஆகிய விடயங்களை எடுத்து நோக்கின் ஆண்-பெண் வரையறை அற்ற சந்திப்புக்களை தவிர்க்கின்ற போதும் இஸ்லாம் கூறும் நடைமுறையில் இருந்து நீங்கிய மேற்கத்திய கலாசார தாக்கத்துடன் கூடிய ஆண் - பெண் நட்பு, சமூக வலைதளங்களில் முகமறியாதவர்களுடனான நட்பு, காதல், திருமணத்திற்கு (நிகாஹ்) முன்னரான சந்திப்புக்கள் போன்ற இஸ்லாம் தடுக்கின்ற விடயங்களில் பாராமுகமாகவே இருந்துள்ளனர். இவ்வாறான சமூக உறவுகளில் இஸ்லாமிய நடைமுறையைப் புறக்கணித்து மேற்கத்திய நடைமுறையை பின்பற்றுவபர்களின் வயது ரீதியான பிரதிநிதித்துவத்தை நோக்கும் போது 15-25 வயதுக்கு இடைப்பட்டவர்களாக காணக்கூடியதாக உள்ளது.

அதேபோன்று விழுமியங்களை எடுத்து நோக்கின் முகமன் கூறும் விடயத்தில் இஸ்லாமிய நடைமுறையை பின்பற்றுவதையும் கைலாகு செய்தல், ஓய்வு நேரத்தை பயன்படுத்தும் முறை போன்ற விடயங்களில் இஸ்லாம் வழிகாட்டியுள்ள வழிகாட்டலுக்கு மாற்றமாக மேற்கத்திய போக்கை இப்பிரதேச பெண்கள் கொண்டுள்ளமை இவ்வாய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவாக ஆய்வுப்பிரதேச பெண்களின் உணவு, உடை, விழுமியம் மற்றும் சமூகத்தொடர்பு போன்றன பகுதியளவில் மேற்கத்தேய கலாசாரத் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதுடன். இவற்றால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாக 15 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## References

Al-Quran

Abdurrahman. (2009). The Golden Languages of the Prophets- Sahihul Buhar (Volime 1). Cennai: Rahmat Trust.

Ameen, M.I.M. (1996). Islamic civilaization. Al-Kalam Publisher: Baruwala.

Anthony Giddens., (2005). Introduction to sociology. WW. Norton Publication

Abdhulhamid O. Mohammed E. (2013). Clash of Culture: The Interface Between Islam And West. Global Journal of Politics and Law Research, 7-26

Naleer, M.H.M. (2017). *Islamiya Naharihathin thoddramum Valarchium (Second Edition).* Hadi Bookshop: Colombo.

Mukthar, M.A. (1986). *Islamic civilaization.* Al-Azhar Publisher: Weligame.

Ellingsen, T. (2000). Colorful community or ethnic witches brew? Multiethnicity and domestic conflict during and after the cold war, *Journal of conflict resolution,* 44(2), 228-49.

Fischler, C. (2011). Commensality, society and culture. Social Science Information, 50(3–4), 528–548. https://doi.org/10.1177/0539018411413963

Karandashev, V. (2015). A Cultural Perspective on Romantic Love. Online Readings in Psychology and Culture, 5(4). https://doi.org/10.9707/2307-0919.1135

Kasia, L. (2019). Domesticating and foreignising strategies as part of the actor's performance in the Irish-Polish production of Bubble Revolution. *Dramaturgy of Migration: Staging Multilingual Encounters in Contemporary Theatre*.

Pannilage, U. (2016). Globalisation and construction of local culture in rural Sri Lanka. *Sociology Study, (6)7, 448-436. http://dx.doi.org/10.17265/2159%E2%80%905526/2016.07.003*

Sanikidze, George Walker, Edward W, (2004). *Islam and Islamic Practices in georia.* Berkeley Program in Soviet and Post-Soviet Studies Working Paper Series. https://escholarship.org/uc/item/7149d486

Veysi Nab, B., Babaei Aghdam, F., Ghorbani, R. (2019). Identification and Leveling Related Factors in Urban Livability (Case Study: Tabriz Metropolis). *Geographical Urban Planning Research (GUPR)*, 7(1), 127-149. doi: 10.22059/jurbangeo.2019.271201.1020

Mughal, Munir Ahmad, Islamic Culture (الثقافة الاسلاميه) (August 13, 2011). Available at SSRN: https://ssrn.com/abstract=1909254 or http://dx.doi.org/10.2139/ssrn.1909254

Deepshikha shahi, (2017). The Clash of Civilizations Thesis: A Critical Appraisal. https://www.e-ir.info/2017/04/02/the-clash-of-civilizations-thesis-a-critical-appraisal/